**சார்பு நீதிமன்றம், போளூர்**
**முன்னிலை: திரு.S.செந்தில் பாபு, எம்.ஏ., எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, போளூர்**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**இந்து திருமண அசல் மனு எண் 94/2025**
**CNR No.TNTM22-000556-2025**

1. ஜனனி
2.சூரியமூர்த்தி ………மனுதாரர்கள்

//எதிர்//

இல்லை ……….எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெயகோபி மற்றும் திரு.இ.யுவராஜ் ஆகியோர்கள் ஆஜராகி, 02.03.2026 அன்று மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்டுக்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்களால் இந்து திருமணச் சட்ட பிரிவு 13(B)–ன் படி மனஇசைவு விவாகரத்து (Mutual consent divorce) கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு**

மனுதாரர்கள் இருவருக்கும் 24.05.2023 அன்று திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், காங்கேயநல்லூர் மதுரா, படியம்பட்டு கிராமத்திலுள்ள ஸ்ரீ அருள்மிகு கன்னியம்மன் திருக்கோயிலில் திருமணம் நடைபெற்றது. மனுதாரர்கள் இருவரும் நெருங்கிய உறவு முறை என்பதாலும் சிறு வயது முதலே ஒன்றாக வளர்ந்ததாலும் திருமண பந்தம் ஏற்பட்டதாலும் இருவருக்குள்ளும் இல்லறத்தில் நாட்டம் இல்லாமல் தாம்பத்தியற்கான மனரீதியான ஒப்புதல் இல்லாததாலும் கணவன் மனைவியாக தொடர விருப்பம் இல்லாத நிலையில் திருமணமான ஒரு மாதத்திலேயே மனுதாரர்கள் இருவரும் இரண்டு வருடங்களுக்கு மேலாக தனித்தனியாக பிரிந்து அவரவர் இல்லத்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஆதலால் மேற்கண்ட திருமண வாழ்க்கையில் குழந்தை

பிறப்பதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. இருவரும் சேர்ந்த வாழ இயலாத அளவிற்கு கருத்துவேறுபாடு ஏற்பட்டு சுமார் 2 வருடங்களுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதால் இருவரும் மனமொத்து பிரிந்து வாழ விரும்புகின்றார்கள். திருமணத்தின்போது 2ம் மனுதாரருக்கு அளித்த சீர் வரிசை சாமான்கள் மற்றும் 24 சவரன் தங்க காசுகள் வெள்ளி பூஜை சாமான்கள் ரூ.12,00,000/– ஆகியவற்றை 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும் 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரிடமிருந்து கடந்த கால நிகழ்கால எதிர்காலத்திற்கான எவ்வித ஜீவனாம்ச தொகையையும் கோரப்போவதில்லை என உறுதி செய்துகொண்டனர். மனுதாரர்கள் இருவரும் யாருடைய தூண்டுதலும் இன்றி தங்களுடைய சுய விருப்பத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் இருவரும் இனி சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால் மனுதாரர்களுக்கு கடந்த 24.05.2023 அன்று நடந்த திருமணத்தை ரத்து செய்து மனஇசைவு விவாகரத்து (Mutual consent divorce) வழங்கி உத்தரவிடும்படி மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

2. இம்மனுவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்:–

மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளபடி அவர்களது திருமணத்தை ரத்து செய்து மனஇசைவு விவாகரத்து வழங்கி உத்திரவிட இயலுமா?

3. மனுதாரர்கள் தரப்பில் இருவரையும் ம.சா.1 மற்றும் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரை ம.சா.1ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>தீர்வு</u>**

4. கற்றறிந்த இருமனுதாரர்களின் தரப்பு வழக்கறிஞர் இருமனுதாரர்களின் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து மனுவை அனுமதித்து உத்தரவு வழங்குமாறு வாதுரை செய்தார்.

5. மனுதாரர்கள் ம.சா.1, ம.சா.2 தங்களது சாட்சியத்தில் தங்களுக்கு கடந்த 24.05.2023 தேதி அன்று திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு பிறகு மனுதாரர்களுக்கிடையே திருமண வாழ்க்கையில் குழந்தை பிறக்கவில்லை என்பதால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடந்த 2 வருடங்களுக்கு மேல் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதால் இருவரும் சேர்ந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளோம் என தெரிவித்துள்ளர்கள். ம.சா.1, ம.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 – திருமண புகைப்படம் ஆகியவற்றை பரிசீலிக்கையில் மனுதாரர்கள் இருவருக்கும் 16.02.2014 அன்று திருப்பதி

கோவிலில் காதல் திருமணம் நடைபெற்றது என்பது உறுதியாகிறது. மேலும், அவர்கள் திருமணம் நடைபெற்று சில ஆண்டுகள் மட்டுமே நல்ல முறையில் வாழ்ந்து வந்தனர் என்பது ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியத்தின் மூலம் அறிய முடிகிறது. இருவருக்குள்ளும் இல்லறத்தில் நாட்டம் இல்லாமல் தாம்பத்தியற்கான மனரீதியான ஒப்புதல் இல்லாததாலும், அதுவே அவர்களது மண வாழ்க்கையில் பிரச்சனை ஏற்பட்டு மனுதாரர்களுக்கிடையேயான மனக்கருத்து வேற்றுமை பெரிய பிளவாகி இனிமேல் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலைகளை உருவாக்கிவிட்டது என்பதை அறிந்துக்கொள்ள முடிகிறது. தொடர்ந்து மனுதாரர்களுக்கிடையே கருத்துவேறுபாடு இருந்து வரும் நிலையில் அவர்கள் இனிமேல் ஒருமித்து சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பில்லை என்ற மனுதாரர்களின் வழக்கறிஞர் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

6. அத்துடன், மனுதாரர்கள் இருவருக்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவு காரணமாக இருவரும் சேர்ந்த வாழ இயலாத அளவிற்கு கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளதால் இருவரும் மனமொத்து பிரிந்து வாழ விரும்புவதாக தெரிவித்தார்கள். 2ம் மனுதாரர் 1ம் மனுதாரரிடமிருந்து எவ்விதமான ஜீவனம்சமோ சொத்து பேரில் வழக்கோ தொடர்வது இல்லை என்றும், அதேபோன்று இனிவரும் காலத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் மற்றவர் வாழ்க்கையில் தலையிடுவதில்லை என்றும் உறுதி செய்துகொண்ட நிலையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே சட்டப்பபடியும் நியாயப்படியும் சரியானதாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

7. இந்நிலையில் மனுதாரர்களுக்குள் இல்லறத்தில் நாட்டம் இல்லாமல் தாம்பத்தியற்கான மனரீதியான ஒப்புதல் இல்லாததாலும் கணவன் மனைவியாக தொடர விருப்பம் இல்லாத என்றும் மனுதாரர்கள் மனுவில் ஒப்புக்கொண்டுள்ளதால் மேலும் 1, 2 மனுதார்கள் இனி சேர்ந்து வாழ சாத்தியக் கூறு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

8. மேலும் திருமண அழைப்பிதழ், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைபடம், 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல், 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் 09.07.2025 தேதியிட்ட பரஸ்பர ஒத்திசைவு மனமுறிவு பத்திரம் அசல் ஆகியவைகளை தங்களுக்கு ஆதராவக தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும் மனுதாரர்கள் இருவரும் கடந்த 2 வருடத்திற்கு மேல் பிரிந்து வாழ்ந்து வரவதை கருத்தில் கொண்டும், மேலும் மனுதாரர்கள் இந்த திருமணச் சட்ட பிரிவு 13 (B) (2) ன்படி போதுமான வாய்ப்பு

கொடுத்தும் சேர்ந்து வாழ எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. எனவே இனிமேலும் அவர்கள் சேர்ந்த வாழ வாய்ப்பில்லை என்று தெரிய வருகிறது. மேலும் இருவரும் சேர்ந்தே ஒத்திசைவின் மூலம் விவாகரத்து கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

9. ஆகையால் மனுதார்கள் இருவரும் கடந்த 2 வருடத்திற்கும் மேல் தனித்தனியாக வாழ்ந்து வருவதை இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களில் இருந்து தெரியவருகிறது. எனவே மனுதாரர்கள் கோரியள்ளபடி விவாகரத்து பரிகாரம் வழங்குவதே சரியானது என்று இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

10. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு, 1–ஆம் மனுதாரருக்கும் 2–ஆம் மனுதாரருக்கும் 24.05.2023 அன்று நடைபெற்ற திருமணம் ரத்து செய்யப்பட்டு, மனஇசைவு விவாகரத்து (Mutual consent divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 13.03.2026 தேதியன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU
Digitally signed by S SENTHILBABU
Date: 2026.03.13 17:54:41 +0530

**சார்பு நீதிபதி**
**போளூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி:</u>**

ம.சா.1 – திருமதி. ஜனனி (1–ஆம் மனுதாரர்)

ம.சா.2–திரு. சூரியமூர்த்தி (2–ஆம் மனுதாரர்)

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

ம.சா.ஆ.1 – திருமண அழைப்பிதழ்

ம.சா.ஆ.2 – திருமண புகைப்படம்

ம.சா.ஆ.3 – 1–மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.4 – 2–மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.5 – பரஸ்பர ஒத்திசைவு மனமுறிவு பத்திரம் அசல்

S SENTHILBABU
Digitally signed by S SENTHILBABU
Date: 2026.03.13 17:54:47 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**